அறிவியற் பகுதி

# இந்துமதமுந் தமிழரும்

[ நக்கீரன். ]

முன் தொடர்ச்சி

பார்ப்பனர்களின் தூண்டுதலின் பேரில் திருஞான சம்பந்தரைப் பார்க்கச்சென்ற திருநாவுக்கரசர் அவரை விட்டுப் பிரிந்து தனியாகப் பல கோயில்கட்குச்சென்று, இந்துமதத்தின் பேரால் அங்கங்கே நிகழுஞ் செயல்களைப் பார்த்து வந்தார். தமிழ் நாட்டிலே இந்துமதக் கொள்கைகளை நிலைநாட்டுவதன் வாயிலாகத் தமிழ்மக்களை இழிவுபடுத்துவதையே குறிக்கோளாகக் கொண்டு, பார்ப்பனர்களால் நடத்தப்பட்டு வரும் சிவன் கோயில்களில் நிகழும் கொடுமைகளைக் கண்ட திருநாவுக்கரசர், தமிழ்மக்களின் மானத்தைக் காப்பாற்றும் முறையிற் பலசீர்திருத்தங்களைச் செய்ய முயன்ருர். ஆனல், அவர் அடைந்த பயன் என்ன? திருத்தூங்கானை மாடம் என்னும் சிவன் கோயிலுக்கு அவர் சென்றிருந்தபோது; அங்கு தமிழ் மக்களை மிகவும் இழிவாக நடத்துவதைக் கண்டு, பார்ப்பனர்களின் அறியாமைக்காகப் பெரிதும் வருந்தி அவர்களைத் தம் அறிவுச் சுடர் கொண்டு திருத்த முயன்ருர். அவர் இங்ஙனம் கூறியதைக் கண்ட அக்கோயிற் பார்ப்பனர்கள் வெகுண்டு 'ஒரு தமிழனுகிய சூத்திரப் பயலா எமக்கு அறிவுபுகட்ட வருவது' என்று சீற்றங் கொண்டவர்களாய், அக்கோயிலிற் கிடந்த ஒரு சூலத்தை எடுத்து நெருப்பில் நன்ருகப் பழுக்கக் காய்ச்சித் திருநாவுக்கரசருடைய தோளிலே சுட்டார்கள். இந்நிகழ்ச்சி பெரிய புராணத்தில் உள்ளது. ஆனல், புராணப் புளுகர்கள் வழக்கமாகக் கையாளும் சூழ்ச்சி இந்நிகழ்ச்சியிலும் புகுந்து விட்டது. பார்ப்பனர்களால் திருநாவுக்கரசருக்கு ஏற்பட்ட இழிவை மறைத்து அதற்கு ஒரு கடவுட்டன்மை கற்பிக்கும் முறையில், திருநாவுக்கரசர் சமணம் புக்குமீண்ட [illegible] போக்குவதற்காகச் சிவனே தமது சூலத்தினல் [illegible] திருநாவுக்கரசருடைய தோளில் ஒரு அடையாள[illegible]தைப் பொறித்தார் என்ற புனைவுரையை மிகவும் [illegible]றமையாகப் புகுத்தி அதனை எல்லாரும் நம்பும்படியுஞ் செய்து விட்டனர். இன்றும் பகுத்தறிவுக்கொ[illegible]வா அந்நிகழ்ச்சியை நம்பும் பேதைமையினேர் பல[illegible]உளர். சிவன் என்ற பெயரால் வழங்கப்படும் ஆ[illegible]தப் பெருங் கடவுள், திருநாவுக்கரசருக்கு ஏற்பட்ட தீட்டைப் போக்கு வதற்காகத் தம்முடைய சூலத்தால் அவருடைய தோளிலே ஒரு சூடு போட்டார் என்றல், அவரிடம் மதப்பித்தர்கள் கூறும் கடவுட்டன்மை சிறிதளவாவது இருக்கிறதாகக் கருத முடியுமா? மதநூல் இலக்கணப்படி, கடவுள் தமது திருநோக்கு ஒன்றினலேயே அனைவருடைய மாசுகளையும் போக்கவல்ல ஆற்றல் படைத்தவர் என்றும், அவர் நினைத்த அளவிலேயே எல்லாக் காரியங்களையும் பிறருடையவும் பிறபொருள்களுடையவும் உதவி எதுவுமின்றித் தாமாகவே செய்து முடிக்கும் வன்மைப் பெற்றவர் என்றும் சொல்லப்படும் போது, ஈண்டுப் பேசப்படும் திருநாவுக்கரசரின் தீட்டைப் போக்குவ[illegible]ற்காகச் சிவன் தமது சூலத்தை எடுத்து அதனை [illegible]ருப்பிலே காய்ச்சித் திருநாவுக்கரசருடைய தோளி[illegible]லே சுட்டார் என்பதை அறிவைப் பயன்படுத்திப் படிக்கும் எவரும் ஒப்புக்கொள்வரா? அன்றியும் மதம் விட்டு மதம் மாறும் மக்களுக்குத் தீட்டென்று சொல்லப்படும் ஒரு சிறுமை யாங்கனம் உண்டாகும்? பெண்களுக்குத் திங்களுக்கோர் முறை ஏற்படும் குருதிப் பெருக்கையும் தீட்டென்றே சொல்லுகிருர்கள். ஒரு மதத்தை ஒழித்துப் பிறிதொரு மதம்புகும் மக்களுக்கும் இத்தகைய தோற்றங்கள் யாதாயினும் உண்டாகின்றனவா என்று பார்த்தால், அப்படி எதுவும் ஏற்படுவதாகத் தெரியவில்லை. யாழ்ப்பாணம், திருநெல்வேலி முதலான ஊர்களிலுள்ள சைவர்கள் பலர் கிறித்த மதத்தைத் தழுவியிருக்கின்றனர். இவர்கள் இங்ஙனம் மதம்விட்டு மதம் புகுந்த காரணத்தால் அவர்களுக்கு ஏற்பட்ட தீட்டைப் போக்குவதற்காகக் கிறித்தவர் கடவுளான இயேசுவோ அல்லது பரமண்டிலங்களில் இருப்பதாகச் சொல்லப்படும் அவருடைய தந்தையோ (பிதாவோ) சிலுவை முதலான மதஅடையாளங்களால் யாதாயினும் சூடு போடுகின்றனரா? இல்லையே! ஆரியர்கள் தீக்கைச் செய்வதன் வாயிலாக இந்துக்களைத் தூய்மைப் படுத்தும் ஒரு பாசாங்கு போலவே, கிறித்தவக் குருமாரும் 'ஞானஸ்நானம்' என்ற பெயரால் ஏதோ செய்கின்றனர். இங்ஙனம் செய்வதால் முக்கிய மதத்தீட்டு நீங்கிவிட்டதாக அவர்கள் கருதிக் களிப்புறுகின்றனர். என்னே மடமை! தீக்கை-ஞானஸ்நானம் முதலான மினுக்குவேலைகள் எல்லாம் மத ஆரியர்கள் தங்கள் மத வாணிகத்தை ஒழுங்காக நடத்துவதற்காகக் கையாளும் சூழ்ச்சிகளே. தீட்டென்று சொல்லப்படும் இக்கொடுமையான திட்டம் ஆரியமக்களால் கொண்டுவரப்பட்டுத் தமிழ் நாட்டிலே புகுத்தப்பட்ட ஒரு பொருளற்ற திட்டமென்பதே தமிழர் கொள்கையாகும். பிறப்பினல் உயர்வு தாழ்வு இல்லை என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டுள்ள தமிழ் மக்கள் முன்னிலையில், ஒருவன் ஒரு மதத்தை விட்டு இன்னொரு மதம் புகுவதால் தீட்டேற்படுகிற தென்றும், அதனைப் போக்குவதற்குத் தீக்கை—சூடு ஞானஸ்நானம் முதலான சடங்குகள் செய்ய வேண்டுமென்றும் கூறுவது எள்ளி நகையாடற்குரிய செய்தியேயாம். தீட்டு என்ற தமிழ்ச் சொல் துப்புரவின்மையைக் குறிக்கும் ஒரு சொல்லேயன்றி, மதாசிரியர்கள் கூற்றுப்படி மத மாறுதல் முதலான காரியங்களைச் செய்வோர் தீட்டுப்பட்டவர்கள் என்பனவற்றிற்குப் பயன்படுத்தக் கூடிய சொல்லாக ஒருபோதும் ஆகாது. தீட்டென்று சொல்லப்படும் அழுக்கு அல்லது துப்புரவின்மையை குளித்தல்-முழுகுதல்-கழுவுதல் முதலானவற்றல் போக்க முடியுமேயன்றி நெருப்பிற் காச்சிய சூலத்தால் சுட்டு நீக்க முடியாது. [தொடரும்]

## மேதினம்.

3—5—42 ஞாயிறுமாலை 6-30மணிக்கு வழக்கப்படி நடக்கிற வாராந்திரக் கூட்டத்தில் ஷெ தினத்தன்று "திருவிளையாடற் புராண ஆராய்ச்சிக் கூட்டம் நடந்தது அன்றே மே தினத்தை முன்னிட்டு கூட்டத்திற்கு வந்திருந்தவர்களுக்குத் தேநீர் விருந்து நடந்தது. கேரம்பந்தய விளையாட்டில் வெற்றியடைந்தவர்களுக்குப் பரிசு வழங்கப்பட்டது. பரிசு பெற்றவர்கள் G. கிருஷ்ணன், C. A பவாநந்தம், C. R. கோபால், C. S. பூஞ்சோலை. மேதினத்தைப்பற்றியும் ருஷியாவை பற்றியும், திராவிடநாட்டுப் பிரிவினைபற்றியும், பார்ப்பனீயத்தின் கொடுமையைப் பற்றியும் முறையே, தலைவராக பாண்டி சுப்ரமண்யம், C. S. சுந்தரேசன், M. முனுசாமி, டமாத்தூர் S. R ராமலிங்கம், M. கணேசன், T. P. S பொன்னப்பன் முதலியவர்கள் பேசினர்கள். M சுப்ரமண்யம் அவர்கள் வந்தனேபசாரம் கூற கூட்டம் இனிது முடிந்தது.

பார்ப்பன ரல்லாதார் இளைஞர் கழகம்,

பொன்னப்பன் படிப்பகம்,

சின்னக்காஞ்சிபுரம்.

# சீனுவில் பாகிஸ்தான்

[ சுல்தான். ]

சீனுவில் 50,000,000 முஸ்லீம்கள் உள்ளனர். கிறிஸ்துவமார்க்கத்தவர் ஆளும் இடங்களிலோ, புத்த மார்க்கத்தவர் ஆட்சியிடங்களிலோ, முஸ்லீம்கள் அதிருப்திபெற்ருே, கிளர்ச்சி செய்துகொண்டே இல்லை. இந்து ஆட்சியிடமே அவர்களுக்கு இடுக்கணும் இழிவும், இடையூறும் இன்னலும் இருக்கிறது. இதன் காரணத்தைக்காண மறுக்கும் கசடர்கள், இங்கு பாகிஸ்தான் கேட்கின்றனரே, சீனுவிலே கேட்கின்றனரோ! என்று கேட்டு, அது மிகப்பிரமாதமான, அறிவு சொட்டும், அசைக்கமுடியாத கேள்விஎன்று கருதிக்கொண்டு ஏமாறுகின்றனர்.

கிருஸ்தவர்கள், பௌத்தர்கள், மேனுட்டினர், எவரும் முஸ்லீம்களை, இங்கு இந்துக்கள் கருதிக்கொண்டிருப்பது போல், இழிந்தவர், தாழ்ந்தவர், மிலேச்சர், தீண்டப்படாதோர், என்று செருக்குடன் செப்புவதில்லை. சாத்திரங்கள் எனும் குப்பைகளில் அத்தகைய சழுக்கர்குணம் காட்டுவதில்லை. நடைமுறையிலும், முஸ்லீம்களைக் கண்டால் வெறுத்தும், கலந்திருக்க மறுத்தும், கயவராதலில்லை. எனவேதான் ஆங்கெல்லாம், முஸ்லீம்கள், மனங்கொதிப்பதில்லை. இங்கோ, முஸ்லீம்களைத், தீண்டாதார் போல நடத்துகின்றனர். இந்துக்களின் ஓட்டல்களில் பலவற்றிலே முஸ்லீம்களுக்கு இடந்தருவதில்லை, சில இடங்களிலே ஒதுக்கிடமே தருகின்றனர், கோயிலையோ அண்டக்கூடாது, குளத்திலே முழுகலாகாது, உண்ணவோ, உறவாடவோ கூடாது, அது ஆச்சார விரோதம், சாத்திர சம்மதமாகாது, ஜாதி உயர்வுக்குக் கேடுநேரிடும் என்றுரைக்கின்றனர். எனவேதான் இங்கு இஸ்லாமியர் தனியாட்சி, தனித்தரணி கோருகின்றனர். சீனத்திலே அவர்களின் சிந்தையில் தீ மூட்டும் ஆரியமில்லை.

சியாங்-கே-ஷேக்கின் அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமாகி, சீனர் தொடுத்துள்ள அறப்போரில் ஆர்வத்தோடு கலந்துழைக்கும் வீரர், சீனப் படைகளின் துணைத்தலைவர், ஒரு முஸ்லீம். அன்னுரின் பெயர் ஜெனரல் பாய்சங்ஷி. இஸ்லாமியர் கழகத்தை 1938 அவர் நிருவினர் சீன முஸ்லீம்களைத் தமது வஞ்சக வலையில் வீழ்த்தவேண்டுமென்று ஜப்பான் முயன்றபோது வடமேற்குக்களத்திலே வன்மையோடு நின்று எதிர்த்து, சீனமுஸ்லீம்களைத் திரட்டி அணிவகுத்தவர்கள், மூன்று பெரும்முஸ்லீம் தலைவர்களையாகும். ஜெனரல் மா ஹங்வீ, ஜெனரல் மா ஹங்பின், ஜெனரல் மாபூ, ஆகிய இம்மூவரும் ஜெனரல் சியாங்கின் முயற்சிக்கு மிக்க உதவியாக இருந்தனர். சீனக் குதிரைப்படைத் தலைவராக இருப்பவர் ஓர் இஸ்லாமியரே. இவரது பெயர் ஜெனல் மாபுசிங். மற்றும் ஜெனரல் யாங்டெலியாங், ஜெனரல் யுல்பாஸ், மாயூசி, முதலியபலர், படைத்தலைவர்களாக உள்ளனர். யூனுன் மாகாணத்துக்குக் கவர்னராக, மாட்சங் என்பவர் இருந்திருக்கிருர். இப்போது அவர் அந்த மாகாணத்தில், முஸ்லீம். முன்னேற்றக்கழகத் தலைவராக இருக்கிருர்.

படையில் மட்டுமல்ல, பாராளும் மன்றங்களிலும், முஸ்லீம்கள் உள்ளனர். மாபுலியாங், இஸ்மாயில், இருவரும், நாட்டுராணுவக் கழகத்தில் யோசனை யாளர்களாக உள்ளனர்.

ராஜதந்திரத்துறையிலும் சீன முஸ்லீம் தலைவர்கள் நல்லிடம் பெற்றுள்ளனர். துருக்கியில், சீனத்தூதர் காரியாலயக்கர்த்தாவாக மாஹங்டு என்பவரும், அரபியாவில், சீனத்தூதர் நிலையத்தில், லின்ஷிமிங் என்பவரும் அமர்ந்துள்ளனர். கல்வித்துறையிலேயும் சீனமுஸ்லீம்கள் செல்வாக்கான இடம்பெற்றுள்ளனர். ஷேக்-டா-புஷங், மாசங்-டிங், ஷாகூசன், ஆகிய எண்ணற்ற பலர், கல்வித்துறையிலே தலைவர்களாக உள்ளனர். கொரானைச் சீனமொழியில் மொழிபெயர்த்தவர், ஷேக்வாங் வங்செங். என்ற சீனமுஸ்லீம் பிரமுகரேயாகும். இத்தகைய நிர்வாகத் தோழமையும் சமுதாய உரிமையும், சமத்துவமும் சீனத்தில் தழைத்திருப்பதனுல், அங்கு பாகிஸ்தான் கேட்டாரில்லை. இங்கு, சென்னைசட்டசபையிலே ஆச்சாரியார் முதலமைச்சராக இருந்த போது, ஜனுப் அப்துல் ஹமீத்கான் வைத்திய இலாக்காவிலும், ரயில்வே இலாக்காவிலும் முஸ்லீம்களுக்கு என்னபங்கு தரப்பட்டிருக்கிறது என்று கேட்டதற்கு "ஏதேது இனி ஹைகோர்ட் டிங் செஷனிலும் பங்குகேட்பீர் போலிருக்கிறதே" என்றன்றோ கூறினர்! இந்த அணவத்தோடு, சீனநாட்டிலே இஸ்லாமியருக்குக் காட்டப்படும் தோழமையை ஒப்பிட்டுப்பார்ப்பவர், ஓட்டைவாயராகி, சீனுவில் பாகிஸ்தான் ஏன்கேட்கவில்லை என்று கேட்கமாட்டார்கள்! சீனுவில்இந்துஆட்சி இல்லைஎனவே அங்குபாகிஸ்தான் ஏற்பட வேண்டுமென்ற கிளர்ச்சிஇல்லை. பாகிஸ்தான் என்றால், என்னபொருள்! பாக் = பரிசுத்தமான, கெட்டது நீங்கிய, ஸ்தான் = இடம்! நல்லாட்சியுள்ள இடம் என்பதே பொருள். இந்து ஆட்சியிலே, முஸ்லீமுக்கு நன்மை இல்லை. உரிமை இல்லை, நீதிகிடைப்பதில்லை. எனவே அவர்கள் இங்கு நல்ல ஆட்சிகேட்கிறார்கள். சீனத்தில் நல்ல ஆட்சி, பாகிஸ்தான், ஏற்கனவே இருக்கிறது!

---

**குமஸ்தாவின் பெண்தான்!** (10ம் பக்கத் தொடர்ச்சி

களே, நீங்கள் இனித்தயவு செய்து இங்கேவரவேண்டாம் என்று அப்பா, மிராசுதாரரிடம் கூறமுடியுமா? கூறினல் அந்த ஆள் கோபித்துக்கொண்டு, அவ்வளவு அலட்சியமா உனக்கு என்று வைவாரே. வேலை போய்விடுமே. பிறகு பிழைப்புக்கு என்ன செய்வது?

ஒரு இரவு, அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நடந்த சம்பாஷணை எங்கள் வாழ்வு எவ்வளவு வேதனைக்குழியில் விழுந்துவிட்டது என்பதைக் காட்டிற்று.

"விஷயம் விபரீதமாகிவிட்டதே தெரியுமோ" என்று பேச்சை ஆரம்பித்தார் அப்பா.

"என்ன சொல்லுங்கோ? என்ன விபரீதம்" என்று அம்மா அச்சத்துடன் கேட்டாள்.

"மிராசுதாரர்.........."என்று இழுத்தார்ப்போல் மெதுவாகச் சொன்னர் அப்பா.

அம்மா பதைத்து "மிராசுதாருக்கு என்ன?" என்று கேட்டாள்.

"அவனுக்கு என்ன? கல்லுப்பிள்ளையார் போலிருக்கான். மெதுவாகப் பேசடி, அவள் காதிலே விழப்போகிறது. மிராசுதாரன் நம்ம குடியைக் கெடுத்துவிடுவான் போலிருக்கு. காந்தாமீது கண்வைத்து விட்டான். இன்றுகாலையிலே, அவன் தைரியம் என்னிடம் சொல்கிருன், என்சாமி நம்மவீட்டிலே காந்தாஇருந்தா, எவ்வளவு செல்வமாகவாழும் தெரியுமோஎன்று, வயறு எரிகிறது. இனி அரைக்ஷணம் இந்த ஊரிலே இருக்கப்படாது" என்ருர் அப்பா.

அம்மா, "ஐயோ தெய்வமே அனியாயக்காரன் அழிந்துபோக அம்பிகே நீதாண்டியம்மாதுணை" என்றுகூறி அழுதார்கள். அப்பா சமாதானங்கூறினர்கள். வயோதிகப் பருவத்திலே அவர்கள் பாபம், என்னல் வதைகிருர்கள். நான் குடும்பத்துக்குச் சுமை மட்டுமல்ல, அவர்கள் வயற்றுக்கே பெருந்தீ! நான் அபலை மட்டுமல்ல, அபாயக்குறி!! (தொடரும்)

# ரோமாபுரி ராணிகளின் லீலா விநோதம்

[ வீனஸ். ]

## அக்ரிப்பாளுவின் அக்ரமம்.

அந்த ஆக்டி என்பவளிடம் அவன் அவ்வளவு சொக்கிவிட்ட காரணம் என்னடி சேடி?

இதுதெரியாதா அரசி! மணமுள்ள மலர், சுவையுள்ள கனி, சுந்தரமான மாது, இவைகளிடம், அனுபவிக்கத் தெரிந்தவர்கள் அடிமை யாகிறார்கள்.

ஆக்டி அழகியா?

சந்தேகமென்ன! அடிமையாக இருந்தவள் தான். ஆனால் நல்ல வனப்புள்ளவள். வசீகரிக்கும் குணம் படைத்தவள். அவளிடம் உமது மகன் அடிமை போலாகிவிட்டார். அவள் எள் என்னு முன்னம் எண்ணெபோல் நிற்கிறார். மேலும், அம்மணி, அவள் மிக்க தளுக்குக்காரி, ஒய்யாரி, அலங்காரி!

தெரிகிறது விஷயம். அவன் சிறுவன், அவளுடைய அழகும் அலங்காரமும் அவனை வென்று விட்டது. ஆமாம்! என்னுடைய நாட்களிலே, நான் இரு என்றால் இருந்து, நட என்றால் நடந்து கிளாடியஸ் மன்னன் எனக்குக் கைதியாகி இருக்க வில்லையா. என் ஏவலைத்தானே அவர் ரோம் சாம்ராஜ்யச் சட்டங்களைவிட மேல்எனக் கருதினார். என்னைத் தேவதையைப் பூஜிப்பதுபோல் பூஜித்தார். அன்றுநான் இருந்த விதம்எப்படி! எத்தனை மன்னர்கள் என்முன் மண்டியிட்டுக் கிடந்தனர்! எத்தனை மலர்ச்சோலைகளில் என் நினைவால் மயங்கி மாவீரர் வீழ்ந்துகிடந்தனர். என் மேனியின் பொலிவை, கண்களின் கனிவை, பேச்சின் பிகுவைப்போற்றியவர் எவ்வளவு. ரோம் ராஜ்யம் மட்டுமா என்புகழ்வீசிற்று. வெளிநாட்டுவேந்தர்கள் "வேல்விழியாளே! கண்களுக்கு விருந்தே! களைத்த எம்மனதுக்கு மருந்தே!" என்று என்னை வர்ணித்ததைக்கேட்ட காதுகள் இவை! ஜுலியஸ் சீசரின் உடலிலே, ஈட்டி புகுந்ததுபோல், என் கண் வீச்சு எத்தனை பேரின் இருதயத்திலே புகுந்தது, எவ்வளவு வெற்றிகள் பெற்றது! இந்தக்கரங்களைத் தீண்டினால் போதும் என்று தெண்டனிட்டுக் கிடந்தவர்கள் பலர்! இப்படி வாழ்ந்த நான், இன்று, வதைவதா! செல்வாக்கை இழந்துவிடுவதா? ஒரு அடிமைச் சிறுக்கியின் அலங்காரமா என் அரசு போகத்தையும் அதிகாரத்தையும் அழிக்கத்துணிவது- தோழி! நீயே கூறு, என் அழகு குறைந்திருக்கலாம், காலப் போரினால். ஆனால், இந்தவைரத்தை மீண்டும் ஜொலிக்கவைக்க முடியாதா! அந்த ஆக்டேவுக்குத் தெரிந்த தளுக்கு எனக்குப்பாலபாடம்! அவள்செய்து காட்டும் அலங்காரம் எனக்கு ஆரம்பக்கல்வி! பார்க்கிறேன் ஒருகை அவளை. பாங்கி! என்பட்டாடைகளை எடுத்துவா இப்படி! பரிமளப் பெட்டியைத் தூக்கிக் கொண்டுவா இங்கே! நிலக்கண்ணாடியைக் கொண்டுவா! இதோபார், நான் பழய மோகனாங்கியாகக் காட்சியளிக்கிறேன். சுருங்கிய சதையை மினுக்கவைக்கும் தைலம்இல்லையா! காலம்உண்டாக்கிவிட்ட களங்கத்தை வெல்ல எனக்குத்தெரியும். சாம்ராஜ்யத்தைச் சுழல வைத்த இந்தக்கண்களுக்கு மீண்டும் வேலைதருவேன்! அடிமை ஆக்டேவிடம் சொக்கிவிட்ட அந்த நீரோவை நொடியிலே நான் கவர்கிறேன்!

என்ன? என்ன? இதென்ன பேச்சம்மா! நீரோ யார்? நீர்யார்? உமது மகனை, நீர் மயக்குவதா! இதென்ன அக்ரமம். அவன் ஆக்டேயிடம் சொக்கிக் கிடந்தால் அதைமாற்ற நீர் அவனுக்கு மையல் ஊட்டுவதா! நாராசம் போன்றிருக்கிறதே உமதுபேச்சு! நீரோ, உமது மகன். நீர் அவன்தாய்!

நீரோ, இந்நாட்டுக்கு மன்னன்! நான் இந்நாட்டிலே அதிகாரமிழந்து, அந்தஸ்து குறைந்துள்ளவள். எனக்கு இப்போதுள்ள நிலைமாறி, நான் மீண்டும் ஒளிவீசி வாழவேண்டுமானால், அரசனின் தயவுவேண்டும். அரசன் அன்னையென்பதற்காக எனக்கு அன்போடு தரவேண்டிய உரிமைகளை, உன்னதப்பதவியை, அதிகாரத்தைத்தர மறுக்கிறான். தளுக்குக்காரிகளுக்கே அவனுடைய தர்பாரில் இடங்கிடைக்கிறது. நான் பழயபடி தர்பாரில் வாழவேண்டும். எனவே தளுக்குக்காரியாகித்தானே தீரவேண்டும். அன்னைக்கு அவன் தரமறுக்கும் அதிகாரத்தை நான் அலங்காரியானால் தர முன்வருவான். நீரோ என்மகன்—முன்பு! நீரோ இன்று அரசன்! நான் அந்த அரசனைவென்று, அவனை ஆக்டே, பாப்பேயா முதலிய அவனுடைய ஆசை நாயகிகளிடமிருந்து பிரித்துவிடுவேன். கொண்டுவா அலங்காரச்சரக்குகளை. அக்ரிப்பாளுவை அன்னையாகக் கண்டவனின் கண்களுக்கு நான் ஆயிரம் ஆக்டேக்களைத் தோற்கடிக்கக்கூடிய அலங்காரவல்லியாகக் காட்சி தருவேன்.

கேட்கவுங் கூசுகிறது! நினைக்கவும் நெஞ்சுவலிக்கிறது. கேவலம் அதிகாரத்துக்காகவா, மகனை மருவ அழைக்கும் மாபாதகம் செய்யத் துணிகிறீர்கள்.

போடி முட்டாளே! அதிகார வல்லியாக நான் இருந்ததால்தான், நான் உட்கார்ந்துகொண்டிருக்க நீ நின்றுகொண்டு சேவகம் புரிகிறாய். அதோ அவன் தரித்திருக்கும் மணிமுடி, என் தளுக்கு அவனுக்குத் தேடிக்கொடுத்தது! என் சிங்காரத்தால் சீமானின் மனைவியான நான், பின்னர் சாம்ராஜ்யாதிபதியின் தேவியானேன். அதிகாரம் வேண்டாமாம்! அறிவற்றவளே எடுஅலங்காரப் பெட்டியை! மகன், மாதாவின் சௌந்தர்யத்தைக் காணட்டும்! ஆக்டே என் எதிரிலே தலை கவிழ்ந்து நிற்கட்டும். அவனி பிறகு என்னைத் தூற்றட்டும் கவலையில்லை. இன்று எனக்கு அதிகாரம் தேவை.

அம்மணி, நீரோ, தங்கள் இரத்தம், தங்கள் சதை, தாங்கள் பெற்றெடுத்த மகன். இதையுமா மறப்பது?

மறந்தவர் யார்? அவன் மறந்தான், ஆக்டேவின் அழகிற் சொக்கி. அவனுக்கு ஞானோபதேசம் செய்வேன் நான்.

ஞானோபதேசம் செய்வதாகக்கூறிய மாபாதகியின் பெயர் அக்ரிப்பாளு! அவள் ரோம் சாம்ராஜ்யத்தை ஆட்டிப்படைக்கவே அழகு தனக்குக்கிடைத்ததென்று கருதிக்கொண்டிருந்தவள். தன் செல்வாக்கு, தனது மகன் மன்னனானதும் குறையக்கண்டு, மகனென்றும் பாராது அவனையும் தன் மோகனாஸ்திரத்துக்குப் பலியாக்கத்துணிந்த அக்ரமக்காரி. அரண்மனையிலே, அவள்மேலே திட்டப்பட்டபடி, பாங்கியருடன் பேசிக் கலந்தாலோசித்து, அக்ரமக்காரியத்திலும் இறங்கினாள். நல்லவேளையாக அவளது மகன், அவளுக்குப்பலியாகவில்லை. மகனையும் மயக்கியேனும் அதிகாரத்தில் புரளவேண்டுமென்ற பேராசைப் பித்தம் கொண்டவள் அக்கிரிப்பாளு. அவளது வரலாறு இது.

மெசாலினா, உடலும்உள்ளமும் பசிகொண்டவள், காமாந்தகாரி, எனவே அவள் பலரைக் கூடினாள் பாரில் மனித வேட்டையாடினாள். ஜூலியா, குஷாலாக வாழவேண்டும் என்ற எண்ணங்கொண்டவள். எனவே

(8ம் பக்கம் பார்க்க)

**தேவை.**

மாதம் ரூ 25/-சம்பளத்தில் அனுபவமும் செல்வாக்கும் உடைய ஏஜண்டுகள் உடனே தேவை. மற்ற விபரங்களுக்கு 0-1-6 ஸ்டாம்பு அனுப்பித் தெரிந்து கொள்ளவும்.

காஞ்சி நிதி லிமிடெட்,
காஞ்சீபுரம்.



# திராவிடநாடு

ஞாயிறு] 10—5—42 [காஞ்சி.


## காங்கிரஸ் ஹெஸ்! உஷார்!!

அந்த ஆசாமிக்குச் சிலகாலமாகவே சித்த சுவாதீனமில்லாதிருந்தது!

இது ஏதோ சூதாகக் காணப்படுகிறது, நம்ப முடியாது.

திடுக்கிடவேண்டி இருக்கிறது. ஏதோ பெரிய தகராறு அவருக்கும் ஹிட்லருக்கும் வளர்ந்துவிட்டது. ஜெர்மனியில் இருந்தால் உயிருக்கு உலைவைத்து விடுவார்கள் என்று பயந்துதான் இங்கு வந்துவிட்டார், என்று பலர் பலவிதமாகக்கூறினர், திடீரென்று, ஹிட்லரின் சகாவான ஹேர்ஹேஸ், பிரிட்டனில் விமானத்தோடு கீழே விழுந்தபோது.

பலர் பல கூறியும், விவேகிகள், வந்தது ஹெர்ஹெஸ், உஷார்! என்று எச்சரித்தனர். பிறகு, மெள்ள மெள்ள விஷயம் வெளிவந்தது. ஹிட்லர், சோவியத் மீது போர்தொடுக்கும் திட்டத்தைத் தயாரித்ததும், பிரிட்டனிலுள்ள சீமான்களைச் சரிப்படுத்தி, பொது உடமைக்கு எதிராகக் கிளம்பச்செய்து, ஜெர்மனியுடன் சமாதானஞ்செய்து கொண்டு, ரஷியாவைத் தாக்க, உதவியாக இருக்கவேண்டும், என்பதற்காகவே ஹெஸ், தூது அனுப்பப்பட்டார், என்று கூறப்பட்டது.

ஹெர்ஹெஸ், யுத்தக்கைதியாகவே நடத்தப்பட்டு வருகிறார். அவரது சதிபலிக்கவில்லை.

அன்பர் ஆச்சாரியார், காங்கிரசார் திடுக்கிடும்படியாகத் திடீரென்று பாகிஸ்தானைத்தான் ஆதரிப்பதாகத் தெரிவித்ததும், ஹெர்ஹெஸ் சம்பவத்தின் போது பலர் பலவிதமாகப் பேசிக்கொண்டது போலவே, பலர் பலமாதிரியாகப் பேசுகின்றனர். ஆனால் வந்தது ஹெர்ஹெஸ் உஷார்! என்று விவேகிகள் கூறினர். நாமும், வருகிறவர் ஆச்சாரியார் உஷார்! என்றே எச்சரிக்க விரும்புகிறோம்.

தேசியசர்க்கார் அமைப்போம், தேசிய முன்னணி அமைப்போம் என்று பசப்பு மொழி புகன்று, இங்கும் அங்கும் கிடைக்கக்கூடிய பதவிப்பிரியர்களை மயக்கி, பதவி வகிக்கலாம் என்பதே அவரது நோக்கம். இதில், ஏமாறுபவர் இங்கு இல்லை என்பதை நாம் அவருக்குத் திட்டமாகத் தெரிவித்து விடுகிறோம்.

தென்னிந்தியாவுக்கு ஆபத்து சூழ்ந்துள்ள இந்த நேரத்தில், இங்கு நான் பொறுப்பேற்றுக்கொண்டு, ஜப்பானை எதிர்த்துப்போராட விரும்புகிறேன், என்று ஆச்சாரியார் கூறுகிறார். ஆங்கிலோ இந்திய ஏடுகளுக்கு ஆனந்தம் பெருக்கெடுத்தோடுகிறது! மெயில் ஆலவட்டம் வீசுகிறது! அம்மானை ஆடுகிறது! ஆச்சாரியாரின் திறமே திறம், அறிவே அறிவு. என்று கூறுகிறது.

நமது நாட்டுக்கு இஃதோர் நெருக்கடியானநேரம். இதைநாம் மறக்கவில்லை. பர்மா, மலாய், பகுதிகளில் வீழ்ந்த குண்டுகள், தமிழகத்திலே, பலகுடும்பங்களை நசுக்கி நாசமாக்கி விட்டன. இன்று தலைமறைந்துள்ள ஜப்பானியக் கடற்படை, நாளை மீண்டும் வரக்கூடும் என்று மே. த. வைசிராய் கூறுகிறார். எனவே நமது நாட்டுக்கு ஆபத்து வரக்கூடுமென்பதிலே சந்தேகமில்லை. ஆனால், அதைப்போக்க, எதிரியைத் தடுக்க, போரிட, இந்தப் பூசுரர் ஏன்? இங்குள்ள மற்ற எந்தத் தலைவர்களும், இதற்கு இலாயக்கில்லையா? போர் பரம்பரையிலுதித்தவர்கள் இங்கிருக்க, போரென்றால் பிடரியில் கால்பட ஓடும் பஞ்சாங்கக் கூட்டம், போரிடப் போகிறேன் என்றுரைப்பது, அதைச் சிலர் கேட்பது என்றால், அது எவ்வளவு கேலிக் கூத்தாக முடியும்!

"ஆச்சாரியாரின் திட்டத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்யவே நான் சென்னைக்கு விரைந்து செல்கிறேன்" என்று தோழர் சத்தியமூர்த்தியார் யுத்த சன்னத்தராகிக் கூறுகிறார்.

"சென்னைக் காங்கிரசை, அகில இந்தியக்காங்கிரஸ் கமிட்டி, எனது திட்டத்தை எதிர்க்குமாறு செய்யுமானால் நான் எங்ஙனம் ஜப்பானியரை எதிர்த்துப் போரிட வேண்டுமென்று கருதுகிறேனோ, அதுபோல் காங்கிரசையும் எதிர்த்துப் போரிட்டே தீருவேன்" என்று ஆச்சாரியார் முழக்கம் செய்கிறார்.

"அவருடைய இப்போதையமனோபாவத்தில் எவ்விதமான நிர்வாக அதிகாரத்தையும் அவரிடம் ஒப்புவிப்பது அபாயகரமானதாகும். காங்கிரசுக்கு விரோதமாக ஐந்தாம்படை வேலையில்அவரை நிலைமை கொண்டு போய் விட்டுவிடும்.

**ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் காங்கிரசில் அங்கத்தினராக இருக்கவும் தகுதி யுடையவரில்லை**

காங்கிரஸ் கொள்கைக்கு விரோதமாக இவரைக் காட்டிலும் குறைந்ததைச் செய்த பலபிரபல கலகக்காரர்கள் ராஜகோபாலாச்சாரியின் ஆதரவுடன்ஒழுங்கு நடவடிக்கைகள் மூலம் காங்கிரசிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறார்கள்." இந்தக் கடுமையான வார்த்தைகள் நாம் கூறுவதல்ல! அவரை நெஞ்சார நாவார நேற்றுவரை வாழ்த்திக்கொண்டுவந்த காங்கிரஸ் ஏடு, இந்தியன் எக்ஸ்பிரஸ் கூறுபவை!!

கோட்டைக்குள்ளே குத்து வெட்டு நடக்கிறது, தோழர்காள், நாம் நமது படைவரிசையைப் பலப்படுத்த வேண்டாமா! பாகிஸ்தான் தோன்று முன்னம் தோன்றியது திராவிடநாடுப் பிரிவினைத்திட்டம்! பாகிஸ்தான் பட்டாளம் வந்துகொண்டிருக்கையிலேயே, ஆரியச்சேனை ஆளுக்கொரு மூலையாக ஓடுகிறது. ஆச்சாரியார் அபயம்! அபயம்! என்று அலறுகிறார். ஆனால் திராவிடரின் நிலைமை என்ன! திராவிட நாட்டுப் பிரச்னையைக் கவனிக்க இனியேனும் காங்கிரசில் உள்ள தமிழர்களுக்கு, ரோஷமும் அறிவும் தோன்ற வேண்டாமா! இனப்பற்று எழவேண்டாமா!

நாஜீசத்தின் நாசகாலப்படையினரில் ஒருவரான **ஹேர் ஹேஸ்**. தஞ்சம் புகவந்தது கண்டு தடுமாறாது, மயங்காது, சர்ச்சில், நாஜிசத்தை நசுக்கும் போரைத் தளரவிடாது நடத்தினதுபோலவே, காங்கிரஸ் ஹெஸ், எனும் ஆச்சாரியார், நம்மை ஆதரிப்பார்போல் கூறிக்கொண்டுவரினும், அது கண்டு அயராது, ஆரியம் அழியும்வரை, திராவிடர் விடுதலைப்போரை நடத்தியே தீரவேண்டும்.

## 'செத்தவன் பறகாங்கிரஸ்காரன்' என்கிறார்கள் ஜாதி காங்கிரஸ்காரர்கள்!

கோலார் தங்கவயல் ஆதிதிராவிட ஜனசபா 18-4-42 மாலை 6 மணிக்கு சாம்பியன் ரீப்ஸ் மைன்ஸ் K. பிளாக்குக்கும் N. பிளாக்குக்கும் அருகாமையில் ஓர் பந்தலமைத்து அதில் நம் தாழ்த்தப்பட்ட தலைவர் டாக்டர் அம்பேத்கார் மைசூர் மகாராஜா, தீண்டாமையை வைக்கத்தில் சத்தியாக்கிரகம் செய்து வெற்றி பெற்ற பெரியார் ஈ. வே. ராமசாமி சிறுபான்மையார் கட்சிக்கு பெரிதும் போராடும் ஒப்பற்ற முஸ்லீம் வீரத்தலைவர் ஜனுப் ஜின்னா, ஆதிதிராவிடர்களின் பூர்வ சரித்திரத்திற்குப் புத்துயிர் அளித்த சர் A. T. பன்னீர்செல்வம் ஆகியோர்களின் படங்களை வைத்து மைசூர் ராஜதானிக் கொடியையும், பிரிட்டிஷ் ராஜதானிக் கொடியையும் பறக்க விட்டு அலங்கரித்து சமூக முன்னேற்றத்திற்காகவும், யுத்த ஆதரவுக்காகவும் நடந்த கூட்டத்தில் காங்கிரஸ்காரர்கள் பெருங்கூட்டமாக நுழைந்து தடிகளாலும், கல்லுகளாலும், சோடா புட்டிகளாலும், அடித்துக் காயப்படுத்தி அங்குள்ள மேஜை நாற்காலிகளை உடைத்தெறிந்து மைசூர் மகாராஜா ஜனுப் ஜின்னா முதலானவர்களின் படங்களை உடைத்தும் கிழித்தும், பறந்துகொண்டிருந்த மைசூர் கொடியையும், பிரிட்டிஷ் கொடியையும் கந்தல்களாகக் கிழித்துக் கொண்டு போய் விட்டார்கள். இவைகளுடன் சிலரது கைகடியாரங்களையும் அலாரம் கடியாரத்தையும், கவர்ந்து சென்றார்கள் முடிவாக போலீஸ் படைவந்து அங்கு குழப்பத்தை அடக்கிற்று.

19-ம் தேதி காலை ராஜவிசுவாசமுள்ள மக்கள் எவரையும் கலந்தாலோசிக்காமல் தங்கள் ஆர்வத்தின் மிகுதியால் காங்கிரஸ் கொடிகளைக்கீழே இறக்கச் செய்து விட்டார்கள்.

சர்க்கார் அதிகாரிகளும் போலீஸ் அதிகாரிகளும் தங்களாலான எல்லாப் பிரயத்தினங்கள் செய்தும் அதைத்தடுக்கமுடியாமற் போகவே, கடைசியாக இழக்க நேரிட இருந்த பல உயிர்களையும் காப்பாற்ற துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. துர் அதிர்ஷ்டமாக ஒருவர் இறந்தார். இறந்தவர் சமூகத்தின் கொள்கையையும் அதன் முன்னேற்றத்தையும் பொருட்படுத்தாது காங்கிரஸ் காரர்களோடு சேர்ந்து தன்சமூகத்தவர்கள் உயிரையே வாங்கத்துணிந்த ஆதிதிராவிட மகன் இவ்வளவு காங்கிரஸ் பக்தியோடு சண்டைசெய்து இறந்த சிலரை நன்றிகெட்ட அந்நிய ஜாதி காங்கிரஸ் காரர்கள் செத்தவன் பறகாங்கிரஸ்காரன் என்ற அறிவிழந்த மானங்கெட்டதனமாக சொல்லிவிடுகிறார்கள். சகோதரர்களே 'இந்த கேவலத்தைக் கவனித்துப்பாருங்கள்!

இவைகளை எல்லாம்கவனித்தே சமூகத்துக்கு ஒருபெரிய பலத்த கட்சி ஏற்படுத்த ஆங்காங்கு சபாக்களையும், சங்கங்களையும் ஆரம்பித்துவருவதை தடுத்துப் பாழாக்கவும், ஆணவம் படைத்த காங்கிரசை இந்தஊரில் ஸ்தாபிக்கவும் அந்நியஜாதிக்காரர்கள் நம் ஜனங்களுக்குத் துர்போதனையாக 'தொழிலாளிக் கட்சியைக் கவிழ்க்கசூட்சி செய்கிறோ" மென்றும் "கண்டிராக்ட்காரக் கங்காணிகள் சூட்சி" யென்றும் 'சர்க்காருடைய சூட்சி" யென்றும் "கம்பெனியாருடைய சூட்சி" யென்றும் சொல்லி வருகிறார்கள். இவைகளை நம் ஜனங்கள் நம்பி மோசம் போவதுடன் நம்மையும் குறைகூறுகிறார்கள். சகோதரர்களே சற்று கவனித்துப் பாருங்கள்,

இந்த ஊரில் நம் ஜனங்களின் முற்போக்கை நிலைநாட்ட எத்துணை அரும்பாடு இங்க ஆதிதிராவிட வாலிபர்கள் பட்டிருப்பார்கள் என்பதை மூலையில் உறங்கி இருந்து இப்போது வாய் விராப்பு பேசுபவர்கட்குத் தெரியுமா? ஆசையால் சகோதரர்களே நம் ஜாதி கட்சியைக் குழிதோண்டிப் புதைத்து காங்கிரசை நிலைநாட்ட சூட்சி செய்யும் அயோக்கியர்கள் பேச்சைக்கேட்டு "இவ்வளவு நாள் ஆதிதிராவிட சங்கம் எங்கே போச்சு" என்று முரட்டுக்கேள்வியைக் கேழ்க்காதீர்கள். நமக்குள் ஒற்றுமை இல்லாததால் கடந்த 25 வருடங்களாக நம் ஆதிதிராவிட ஜனசபா உழைத்தும் நம மக்கள் அசட்டையாகவே இருந்து வந்திருக்கிறார்கள். இனியேனும் கண்விழித்து ஒற்றுமைபட்டு எதிராளிகளுக்கு இடங்கொடாது நம் ஆதிதிராவிட மக்களுக்கும் காங்கிரஸ் காரர்களுக்கும் ஏற்பட்டிருக்கும் சண்டையைப்போக்கிஇந்த ஊரில் அவர்கள் நடமாட்டத்தால் நம்மக்களுக்கு ஏற்படும் தொல்லைகளை ஒழிக்கக்கங்கணங்கட்டிக்கொண்டு வெளியேவாருங்கள். எல்லாவித உதவியும் அளியுங்கள்! ஜாதியோடு ஜாதி சேர்ந்து உழையுங்கள்.

கோலார் தங்கவயல் ஆதிதிராவிட ஜனசபா.

---

ஒலிபெருக்கும் கருவி அமைக்கப்படும்.

செங்கல்பட்டு மாவட்ட

# ஜஸ்டிஸ் மாநாடு

**14-5-42** வியாழனன்று

திருக்கழுக் குன்றத்தில்

நடைபெறும்.

*

திறப்பாளர்.

**பெரியார் E. V. R.**

தலைவர்.

**S. சோமசுந்தரபாரதியார்**

M. A., B. L.,

கொடியேற்றுபவர்.

**டாக்டர். தர்மாம்பாள்**

*

**படத் திறப்புவிழா**

டாக்டர். A. R. கிருஷ்ணசாமி —டாக்டர். நாயர்.

A. K தங்கவேலர் —தியாகராயர்

T. P. S. பொன்னப்பன் —பெரியார்

ஈழத்து அடிகள் B. A., திராவிடநாட்டுப் படம்

*

ராவ்சாகேப். மே. வேதாசல முதலியார்,

செங்கல்பட்டு முனிசிபல் சேர்மென்.

காஞ்சிபுரம் A. பாலகிருஷ்ணமுதலியார்,

சயப்பாக்கம் ஜமீன்தார்

முத்துலிங்கா ரெட்டியார்,

திருப்பத்தூர். சாமி நாயுடு, B. A., B. L.,

பட்டுக்கோட்டை, K. V. அழகர்சாமி,

வேலூர் C. P. சின்னராஜ்,

S. V. லிங்கம், C. N. அண்ணாதுரை,

திருப்பூர் மொய்தீன்,

மற்றும் பல தலைவர்களும் மாநாட்டில் கலந்து கொள்வார்கள்.

தமிழரே திரண்டு வருக!

**T. சண்முகம், திருவொற்றியூர்**

வரவேற்புக் கழகத் தலைவர்.

---

குறிப்பு:-திருக்கழுக்குன்றம், செங்கல்பட்டு ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து 9-மைல், பஸ், ஜட்கா வசதியுண்டு

**ரோமாபுரி ராணிகள்.** 5 ம்பக்கத் தொடர்ச்சி.

அவள், கண்டவரிடம் கொஞ்சிக் காலங்கழித்தாள். இந்த அக்ரிப்பானாவும், இவர்களைப்போன்றே பலரிடம் குலவியவள், ஆனாள் இவள், தனதுஉடலை உரசி, ஊராளும் நிலைமை பெறவேண்டும் என்ற ஒரே நோக்கங்கொண்டவள். அதற்காகத்தனக்கு யாராரின் உதவி தேவையோ அவர்களை உல்லாசப்படுத்த வேண்டி, அதற்குத்தனது அழகைப்பயன் படுத்தியவள். கெண்டையை வீசி விரால்பிடிப்பது போன்றதாகக் கருதினாள், பலரைத்தன் படுக்கையறை விருந்தினராக்கிப், பாராளும் பதவி பெற்றதை. கனியைக்கசக்கித்தானே கனிரசம் பெறவேண்டும்! அதுபோல், பலரைத்தழுவி, பிறகே பக்குவமான நிலைபெற முடியும் என்று இந்தக் குடிகேடி எண்ணினாள். இவளது காலமுழுவதும், இத்தகைய வேட்டைக்கும், வேட்டைக்காட்டிலே உலவவுமே சரியாக இருந்தது.

அக்ரிப்பானா அழகி என்பதை விளக்கத் தேவையில்லை. அழகுதானே, அரண்மனைக்கு நுழைவுச்சீட்டு! அதை அவள் பெற்றிருந்தாள். கெம்பீரமான உருவம், கமலக்கண்கள், கார்நிறக் கூந்தல், கண்ணாடிக் கன்னங்கள், புன்னகை அதரம், காந்த சக்திக்கல்! பிறந்த குடியோ பெருமையின் இருப்பிடம். அகஸ்டஸ் பேரரசனின் பேத்தி! அவளது உள்ளமும் உடலும் பண்பட்டு, விரிந்த மலராகி, மணம் பரப்பியதும், டோமிடஸ் என்பானை மணம் செய்துகொண்டு வாழ்ந்துவந்தாள். அதுபோது ஒரு மகனை ஈன்றாள்.

அக்ரிப்பானாவுக்கு அரண்மனைவாசம் கிடைத்தது நெடுநாட்களுக்குப் பிறகேயாகும்.

கிளாடியஸ் ஆட்சிக்கு வந்ததும், அக்ரிப்பானாவுக்கு அழைப்புகிடைத்தது. அதற்குள் அக்ரிபானாவுக்குக் கணவன் என்ற விலங்கு கத்தரிக்கப்பட்டு, விதவைக் கோலமெனும் விடுதலை கிடைத்திருந்தது. எனவே அவள் அரசனுக்கு விருந்தாகும் பக்குவமானபண்டமானாள். வழக்கமான சந்திப்பு, சரசம், தூது, துடிப்பு, முதலியனவற்றுக்குப் பிறகு, அக்ரிப்பானா, கிளாடியசைக் கலியாணம் செய்துகொண்டு, அரண்மனைவாசியானாள். இந்நிலையைப்பெற, அக்ரிப்பானா பலரைக் காதலராகக்கொண்டு, தனது கவர்ச்சி பற்றி மன்னரிடம் செய்தி கூறச்செய்து, பிறகே பட்டமகிஷியாக முடிந்தது. இந்த மாஜிகாதலர்கள், இவள் அரசியானதும், பிரதானியாயினர். கொலுமண்டபத்தில், இத்தகையவர்களே நிறையலாயினர். "பாராளும் மன்றத்திலே இதோ பச்சைநிறச்சால்வையும் பால்நிற அங்கியுந்தரித்துக் கொண்டுள்ளவர், எந்தக் களத்திலே வென்றவர், எந்தநாட்டை ரோம் சாம்ராஜ்யத்துக்குப்பணியச் செய்தவர்" என்று கேட்பார் முன்பெல்லாம், ரோம் செனட் மெம்பர்களை! அத்தகைய வீரர்கள் கோட்டமாக செனட் விளங்கியது. அக்கிரிப்பானாவின் காலத்திலோ, அரசிக்கு இத்தகைய உதவியை இந்த நேரத்தில் இவ்விதம் செய்தவர் இவர் என்று கூறித்தான் செனட் மெம்பர்களின் பிரதாபத்தைக் கூறமுடியும். அரசிக்குத் தூதுவர், மாஜிகாதலர், சதிவேலைக்குத் துணைபுரிந்தவர்கள், அரசியின் ஆசைக்குப்பங்கம் விளைவித்தவர்களைக் கொன்றவர்கள், என்று இத்தகையவர்களே கொலு மண்டபத்திலும், ஆட்சிமன்றத்திலும் குவியலாயினர். அரசன் கிளாடியசே, அக்ரிப்பானாவின் அடிமையானான்! அரசி அக்ரிப்பானாவின் கட்டளைக்காக வெளிநாட்டு வேந்தர்களும் வீரர்களும், ராஜதந்திரிகளும் காத்துக்கொண்டிருப்பர். உலகின் பலபாகங்களிலுமிருந்து, அவளை மகிழ்விக்கப் பலர் பலவிதமான பரிசுகளை அனுப்புவர்! தங்கத்தேர், அதிலே வெண்புரவிகள், பொன்இழைத்த ஆடை, அங்கமெங்கும் பணிபூண்டு, அரசி அக்ரிப்பானா ஊர்வலம் வருவாள். அவளாதரவுபெற்றோர்க்கு அரச அவையிலே இடம், மற்றவருக்கோ காராக்கிருகம்!

அரசிக்கு இனி அரசனால் ஆகவேண்டியது ஒன்றுமில்லை. தர்பாரிலே இடங்கிடைத்து விட்டது. மகனுக்கும் செல்வாக்கு வளர்ந்துவிட்டது. பட்டம் அவனுக்கே என்பதும் நிச்சயமாகிவிட்டது. கிளாடியஸ் உயிருடன் இருந்து தரவேண்டியதனைத் தந்தாகிவிட்டது. இனி இறந்துதரவே அவனிடம் பொருள் இருந்தது. அதுவே அவனுடைய கிரீடம்! அதைப் பெற, அரசி தீர்மானித்துவிட்டாள்!

அரசனுக்கு ஏதோ நோய். அதற்குமருந்திடலாயினர். அரசி விஷமூட்டினாள். ஜெனோபன் என்ற வைத்தியர், மருந்துதரவந்தார். அவரையும் அரசி சரிப்படுத்திவிடவே, அவனும் நஞ்சேதந்தான். மன்னன் மாண்டான்.

இவ்வளவு பாடுபட்டு, மகனை மன்னனாக்கினாள். அவனுடைய ஆட்சியோ, தாய்க்கு விரோதமாகவே ஆரம்பித்தது. மகன் பேருக்கு மன்னனாகவும், உண்மையான ஆட்சி தன்னிடமும் இருக்கவேண்டும் என்பது அக்ரிப்பானாவின் கருத்து. மன்னனான மகன், டோமீடஸ் என்ற பெயரை நீரோ என்று புதுப்பித்துவிட்டு, பட்டஞ்சூட்டிக் கொண்டதுடன், தனது சகாக்களுடன் சேர்ந்து ஆளத்தொடங்கினான். ஆக்டே என்ற அழகியுடன் குலவினான். அதிகாரத்தில் அன்னைக்கு இடமளிக்க மறுத்தான். அதற்குப்பிறகுதான், மகனை வேறு மாதர்மயக்கி, தர்பாரில் இடம் பெறுவதைத்தடுக்க, தானே தன்மகனை மயக்கிடத்துணிந்தாள் மாதா! அந்தச்சம்பவமே முதலிலே தீட்டப்பட்டிருக்கிறது.

அந்தப் பாதகத்திட்டப்படியே, அக்ரிப்பானா, ஆடைஅணிகளால் தன்னை அலங்கரித்துக்கொண்டு நீரோவுடன் சரசமாடவும் ஆரம்பித்தாள்! அவனுடைய மனம் பேதப்படும்படியாக, காமக்குறிகளுடன் நடிப்பாள். பேசுவாள். ஆடை நெகிழநிற்பாள், மேல் விழுந்து உபசரிப்பாள், உல்லாசப்பேச்சுகள் பேசுவாள். இவைகளை அந்த மகனும் வெறுத்துத்தள்ளவில்லை! எத்தகைய மகன்! எத்தகைய தாய்!!

ஆக்டேயினிடம் ஆசை அதிகரித்திருந்ததால், நீரோ, மாதா வெட்டிய மாபாதகக்குழியில் விழவில்லை. அதற்கு மாறாக, அக்ரிப்பானாவை ஒழித்துவிடத்தீர்மானித்தான்.

ஆற்றோரமாக உள்ள ஓர் நகரில் அரசன் ஒரு விருந்து ஏற்பாடு செய்தான், அக்ரிப்பானாவும் விருந்துக்கு வரவழைக்கப்பட்டாள். காதலனை நோக்குவதைப்போல, மகனை அவள் பார்த்தாள்! தாயைத்தழுவவேண்டியதைவிட சற்று அதிகமான சல்லாபத்துடன் அக்ரிப்பானாவை நீரோ தழுவிக்கொண்டான்! ஆனால் அதே நேரத்தில் அவளை ஒழிக்க ஏற்பாடு செய்திருந்தான். பட்டத்தரசிகள் செல்லும் படகு! அதிலே ஏறிக்கொண்டு அக்ரிப்பானா கிளம்பினாள், இடையிலே படகு உடைந்தது சதியினால். பலர் இறந்தனர். அக்ரிப்பானா தப்பினாள்.

விருந்து நடக்கும் ஊருக்கு மீண்டும் வந்தாள். நீரோ இதனைக் கேட்டு, சதிபலிக்காததுகண்டு சலித்துக்கொண்டான். உடனே அவனுடைய ஆட்களில் துணிந்த பேர்வழி அரசனிடம் கட்டளை பெற்றுக்கொண்டு, அக்ரிப்பானாவின் மனைசென்றான். அவன் வந்ததும், வேலையாட்கள் விரண்டோடினர் பழுப்புநிறமாக விளக்கு எரிந்துகொண்டிருந்தது. பதைப்போடு படுக்கையில் கிடந்தாள் அக்ரிப்பானா. அவளெதிரே வந்து நின்றான் கொலைசெய்யத் துணிந்தவன். கூவினாள் அக்ரிப்பானா! கொல்லவந்தவனை நோக்கி "நீரோ என்ற கொடியோனைப் பெற்ற இந்த வயற்றை முதலிலே கிழித்தெறி" என்று மனம்நொந்து கதறினாள். அவனுடைய வாள், அவளுடைய தேகத்திலே பல இடங்களில் பாய்ந்தன! அக்ரிப்பானா மாண்டாள்! ரோம் நாட்டு ஆபாசக்களஞ்சியம் அழிந்தது!!

# குமஸ்தாவின் பெண்தான்

அல்லது

## கொலைகாரியின் குறிப்புகள்

—— சௌமியன் ——

[முன்]: கள்ளக்காதலனைக் கொன்று தூக்கிலிடப்பட்ட காந்தா, தனது டைரியில் வாழ்க்கை வரலாற்றை எழுதியிருக்கிருள். ஆரம்பக் காதலன் அவளை உதாசீனம் செய்த பிறகு அவள் திருமணம் நடக்கிறது. அது இது.

வாழ்க்கையிலே இனி எனக்கு என்ன இருக்க முடியும்? ஒருபெண் தனது உள்ளன்பை எடுத்துக் கூறியும், அது கேலிசெய்யப்படுவது கண்டால், பிறகு உலகில் ஏன் உயிரோடு இருக்கவேண்டும்? மனம் உடைந்து ஏன் வாழ்வது? எதற்கு அந்த வாழ்வு? பூபாரமாக இருப்பதில் என்னபயன்? என்னைப்பெற்றவர்கள் என்னைப் பார்க்கும்போதெல்லாம் கவலைப்படுவார்கள். எனக்கோர் வீரன் கிடைக்கவில்லையே, வரதட்சிணை தர வழியில்லையே என்று அவர்கள் வாடுகிருர்கள். என்னை யார் கலியாணம் செய்துகொண்டாலும் எனக்கு ருசி இருக்கப்போவதில்லை. சோமு திரக்குமாரத்திரைக்குப் போனபிறகு நான் நடைப்பிணமானேன். என் தேககாந்தி மங்கத்தொடங்கிற்று. உடலிலேயும் உள்ளத்திலேயும் தளர்ச்சி ஏற்பட்டுவிட்டது. வாழ்விலே வெறுப்புண்டாயிற்று. சமைப்பதும் படிப்பதும், அழுவதும் கண்களைத்துடைத்துக் கொள்வதும், இவைகளே என் நித்யகர்மங்கள். நித்திரை என்னைப்பிரிந்தது. புண்பட்ட என்மனம் ஆற வழிஎன்ன?

மனங்குளிர மார்க்கம் இல்லை. காந்தா இறந்துவிட்டாள். வெறும், குமஸ்தாவின் பெண், கூனோ குருடோ, செவிடோ ஊமையோ யாரோ ஒருவனுக்குப் பெண்டாகி, அவனிடம் சோறுபெற்று, சாவு வந்ததும் சுகம் பெறுவதற்காகக் காத்துக்கொண்டிருக்கும் பெண்தான் மிச்சம். மணமில்லா மலரும், மதியில்லா இரவும், சுவையற்ற வாழ்வும் என்னபயன்! உப்பில்லாப்பண்டம் நான், எந்தக் குப்பையில் கிடந்தாலென்ன?

கூந்தல் நரைத்துவிட்டால் தலை மயிர் கருக்கும் தைலம் பூசிக்கொள்கிருர்கள், பல்போய்விட்டால் டாக்டர் போலிப்பற்கள்கட்டுகிருர், கால்இழந்தவர்களும் கட்டையை ஊன்றிக்கொண்டு நடக்கக்காண்கிறோம். அதுபோல், இன்பமாக வாழலாம் என்ற என் எண்ணத்தில் மண் விழுந்தபிறகு, சக்கை போன்ற சாதாரண வாழ்வுக்காவது வழிபிறந்ததா? இல்லை! மாளிகை இடிந்தாலும், மதிற்சுவற்றிலே கொஞ்சமும், மண்டபத்திலே பாதியுமாவது இருக்குமே அதுபோலவாகிலும், என்மனக்கோட்டை இடிந்ததில், கொஞ்சமாவதுமிச்சம் இருக்கக் கூடாதா? கூடகோபுரம் வெறுங்குப்பைமேடாகிவிட்டது. எங்கள் குடும்ப பாரத்தைக்குறைப்பதற்காகவேனும் எனக்கோர் துணைவர் கிடைக்கவேண்டுமே, அதாவது சரியாகக்கிடைத்ததா? எனக்கா கிடைக்கும்! கூன்பட்ட என்வாழ்வு நிமிரவில்லை. வளைந்தஎன்வாழ்க்கை முறியத்தொடங்கிற்றேயொழிய, ஊன்றுகோலின் உதவிபெற்று உலவும் வழியும் பிறக்கவில்லை.

நான் திகில்பட்டுக்கொண்டிருந்தது போலவே என்திருமணம் நடந்தது. என்னை மனைவியாகப்பெற்ற மகாநுபாவருக்கு ஐம்பது வயதுக்கு மேலிருக்கும். நரைமயிர், நல்ல கருப்புச்சாயம் பூசிக்கொண்டிருந்தார். பல் பலபோய்விட்டன, பொய்ப்பற்கள் கட்டிக்கொண்டிருந்தார். கன்னங்களிலே குழி, கை கால்களிலே படை, அதைமாற்ற சந்தனம் பூசிக்கொண்டிருந்தார். உடலோ உலகில் உழன்றதால் இளைத்துப்போயிருந்தது, அதன்மீது பளபளப்பான பட்டு, சரிகைப்போர்வைகள் அவருக்கு! இந்த இலட்சணத்திலே காசநோய்! எனக்கு முன்பு அவருக்குப்படுக்கையறைப் பதுமைகளாக இருந்துவிட்டு பரந்தாமன் திருவடி நிழலை அடைந்த பத்தினிமார் மூவர். நான் நாலாந் தாரம் அவருக்கு! அவரிடம்பணம் இருந்தது, ஏழ்மையில் நெளிந்துகொண்டு நானிருந்தேன், கிடாபோல் வளர்ந்தவளை எவனுக்காவது பிடித்துக்கட்டி வைக்காமலிருக்கலாமோ என்று கேட்க ஊரிலே பல பித்தர்கள் இருந்தனர். எத்தகைய பொருத்தமும், தட்சணைதந்தால் சரியாக இருக்கிறதெனக்கூறும் சோதிடர் சிலர் இருந்தனர். உலகிலே எது இல்லை? பளபளப்பான தோலைப்போர்த்துக் கொண்டிருக்கும் பாம்பு இல்லையா! எப்படியோ ஒன்று என்கழுத்தில் தாலி ஏறிற்று. அவர் முகத்திலே களைஉண்டாயிற்று. வீடோ, மாடோ, குறைச்சலான விலைக்குக் கிடைத்துவிட்டால் மகிழும் முதலாளிபோல், அவர் என்னைப்பூரிப்போடு பார்ப்பார். என் இளமை, அழகு, யாவும் அவருக்குத் தானே சொந்தம். இவ்வளவு லலிதமான பொருளை மிக மலிவாக வாங்கிவிட்டோமே என்று சந்தோஷம் அந்த வியாபாரிக்கு! பூரிப்பான வைரமோதிரத்தைத் தொட்டுத் தொட்டுப் பார்த்துக்கொள்ளும் டம்பக்காரன் போல், அவர், நான் போகும்போதும் வரும்போதும், என்னைப்பார்த்துப் பார்த்துக்களிப்பார். அவருக்கு ஆனந்தந்தான்! மூன்று மனைவிகள் இறந்ததும், இத்தகைய 'முத்து' எனக்குக் கிடைக்கவேண்டி இருந்ததால் தான் என்று கூடச்சொன்னர்.

எனக்குத் திருமணம் நடந்தது திவ்யமான நாளாம்! மங்களமான முகூர்த்தமாம்! மங்களத்தின் இலட்சணம் மறுமாதமே தெரிந்துவிட்டது. பழனியைச் சுற்றிப் பார்த்துவிட்டு வரச்சென்ற கணபதிசாஸ்திரிகள், என் கணவர்—கால்வழுக்கிக் கீழேவிழுந்து, சில நாட்கள் படுக்கையில் இருந்துவிட்டு, பரலோகப்பிராப்தி யானர். நான் விதவையானேன். சகுனத்தடையானேன். சமுதாயத்தின் சனியனுனேன். பெற்றோரின் கண்களில் நீர் வழியும்படியான நிலைபெற்றேன். தீ மிதித்தவள்போல் தங்கை காந்தா திகில் அடையக்கூடிய உருவைப்பெற்றேன். என் இளமையும் எழிலும் போகவில்லை. என் கண்ணொளி போகவில்லை. நான் அபலையானேன் ஆனல் அழகியாகத்தான் இருந்தேன். தாலி இழந்தேன். ஆனல் சாய்ந்த தளிர் போலிருந்தேனேயன்றி சாகாகஇல்லை. குங்குமமிழந்தேன். ஆனல் பொட்டிடாத என் நெற்றியும் பொலிவுடன் தான் இருந்தது. பார்சிக் காரிகள் பொட்டிடுவதில்லை. நம்ம காந்தாவின் முகம் அவாளுடையதைப்போல இருக்கிறது என்று அக்கம் பக்கத்தில் பேசுவார்கள்.

வாடாத பூவாக இருந்தேன், ஆனல் விஷவாடை உள்ள மலர் என்று உலகம் என்னைக்கருதிற்று. அது என்னுடைய குற்றமா? எனக்கு மணம் செய்வித்துவிடவேண்டும் என்று துடித்தவர்கள், இன்று எனக்குத் துணையாகவா இருந்தார்கள்? ஏதோ அது அவள் எழுத்து என்று கூறிவிட்டு, என்ன செய்யலாம் கொடுத்துவைக்காதவள் என்று தேறுதல் கூறிவிட்டு, அவரவர்கள் காரியத்தை அவரவர்கள் கவனிக்கத் தொடங்கினர்கள்.

உலகினிடம் வெறுப்பு உண்டாக எனக்கு இந்த ஒருசம்பவம் போதாதா? ஒழுங்காக, நாணயமாக, நாலு பேருக்குப் பயந்து நடந்துகொள்ளவேண்டும் என்று

கூறுகிறார்களே அதை நான் ஏன் பொருட்படுத்த வேண்டும்? என்னை இந்த உலகம் ஒழுங்காகவா நடத்திற்று? சாகப்போகும் கிழவனுக்குச் சல்லாபக் கருவியாக்கிற்று. இது ஒழுங்குதானா? என் இளமை அவனுக்குப் பலியிடப்பட்டது. நியாயமா அந்தச் செயல்? அவன் இறந்ததும் நான் இருந்தும் இறந்தவளாக வேண்டும் என்று உலகம் கட்டளையிட்டது. நீதியாகுமா? உலகத்திலே கொடுமைக்கு ஆளான நான், நன்றி செலுத்தி நல்லவளாக வாழவேண்டுமாமே! நல்லவள் என்றால் என்னபொருள்? நாதனை இழந்த நாரி, வாழ்வை இழந்து வாடுவதுதானா? என்வாழ்வு, என் பொருள் அல்லவா? அதனை, இறந்த என் கணவருடன் சேர்த்துவைத்துக் கொளுத்தினார்களே, அதையும் நான்சகித்துக்கொள்ளவேண்டுமாம். எத்தனை எத்தனையோ விதவைகளின் விதியை எனக்கு உதாரணம் காட்டினார்கள்.

“ஜாக்ரதை! சர்வ ஜாக்ரதையாக இருக்கவேண்டும். நாலுபேர் எதிரே வரவிடாதீர்கள். காலமோ கெட்டுப்போச்சு. பெண்ணோ சிறுசு. மூக்கும் முழியும் சுத்தமாக, அச்சுப் பதுமைபோல் இருக்கிறது. தப்பித்தவறி ஏதேனும் நேரிட்டுவிட்டால் தலைமுறை தலைமுறைக்கும் கெட்டபெயர் நீங்காது.” என்று என் பெற்றோருக்கு உறவினர் புத்திமதி கூறலாயினர். வெந்த புண்ணிலே வேலிட்டனர். நாங்களோ ஏழைகள், என்ன சொன்னாலும் தலையை அசைக்கத்தானே வேண்டும். செல்வவான் வீட்டிலே சென்று இதுபோல் சொன்னால், நாக்கைத் துண்டிப்பார்கள். ஏழைக்குமஸ்தாவிடம் உறவினருக்கு என்னபயம்? எல்லாம் உனது நன்மைக்குத்தான் என்று ஒரே வார்த்தையிலே முடித்துவிடுகிறார்கள். “காந்தா நல்லவள்தான், இருந்தாலும் அறியாதவள் பாரும்! கொஞ்சம் கண் காணிப்பாகத்தான் இருக்கவேண்டும்” என்றுரைத்தனர் அப்பாவிடம். எவ்வளவு அக்கறை பாருங்கள். எங்கள் ஏழ்மையைக்கண்டு உதவி செய்ய முன்வரயாரும் இல்லை. எனக்குத் தக்கவனைத் தேடித்தர ஒருவரும் வரவில்லை, என்வாழ்வு கொள்ளை போவதைத் தடுக்க யாரும் வரவில்லை, எல்லாம் முடிந்து, நான்விதவை யாகினதும், என் விதவைத் தன்மையைக் கெட்டுப்போகாமல் பார்த்துக்கொள்ளும்படி எச்சரிக்கைச்செய்ய,உபதேசிக்க உற்றார் வந்தனர். அவர்களுக்கிருந்த கவலைஎல்லாம், குலப்பெருமைக்குப் பங்கம் வரக்கூடாது என்பதுதான்! என்னைப்பற்றி அவர்களுக்குக் கவலைஇல்லை. எனக்கு வீடே ஜெயில்! அப்பா அம்மாவே காவலாளிகள். உறவினர், போலீஸ். ஊரார் தண்டனை தரும் நீதிபதிகள். இது உலகம் எனக்குண்டாக்கிவைத்த ஏற்பாடு. இதற்காகவா நான் பிறந்தேன்?

விதவைகள் உலகில் நான் வாழ்ந்துகொண்டிருந்த போதுதான் மிராசுதாரர் வேதகிரிமுதலியாரை அடிக்கடி கண்டேன். மரம்பழுத்தால் வௌவால் வருமென் பார்களே, அதுபோல் அவர் எங்கள் வீடு வரத் தொடங்கினார். அவர் பெரும் பணக்காரர், அவரிடந்தானே அப்பாவுக்கு உத்தியோகம். அதைக்கொண்டு தானே எங்கள் ஜீவனம் நடக்கிறது. அடிக்கடி, அப்பாவிடம் முதலியார் வந்து பேசத் தொடங்கியதும், எல்லோருக்கும் சந்தேகமே பிறந்தது. கூப்பிட்ட நேரத்துக்கு ஓடோடிப்போய், இட்ட வேலையைச் செய்ய அப்பா சித்தமாக இருக்கும்போது, மிராசுதார், எங்கள் வீட்டுக்கு வந்து வந்து வலியப்பேசுவதென்றால் அது ஊராருக்கே ஆச்சரியமாகத் தானே இருக்கும்.

என் கணவன் எனக்களித்த தாலியையும் நான் இழந்துவிட்டேன், அவரால் எனக்குக் கிடைத்தது வேறெதுவுமில்லை. அவருடைய சொத்து முதல்தாரத்துப் பிள்ளைகளுக்குப் போய்விட்டது. ஜீவனாம்சத்துக்கு வழக்குத்தொடுக்க வேண்டுமென்றார்கள். பணம் ஏது? வக்கீலுக்குக் கொடுக்கக்காசு இருந்தால், அதை வயற்றுக்குக் கொடுப்போமே நாங்கள். என் கலியாணம் எனக்கு அளித்தது, ஒன்றுமில்லை, விதவைக் கோலந்தான் மிச்சமாயிற்று. அடிக்கடி அழு துசிவந்த என் கண்கள், செந்தாமரை போல் வேதகிரி முதலியாருக்குத் தோன்றிற்று போலும், அதற்கு நானா ஜவாப்தாரி! என்மனதில் வேண்டுமானால் நான் ‘கெட்ட’ எண்ணங்களைக் கொள்ளாமற் பார்த்துக் கொள்ள முடியும். பிறர்மனதை நான் அப்படி இப்படி அசையாதே என்று எப்படி அடக்க முடியும்? பிறர் கெட்ட எண்ணங்கொண்டால், அதற்கு நான் என்னசெய்வது? என் கண்ணைக் கட்டுப்படுத்தி விட்டேன், வேதகிரி முதலியாரின் கண்களை நான்என்ன செய்ய முடியும்? அவரது பார்வையும் பேச்சும், அவரது உள்ளத்தை எனக்குவெளிப்படுத்திற்று.தெரிந்து கொண்டேன், திடுக்கிட்டேன், ஆனால் என்னால்என்ன செய்ய முடியும், புலிமுன் மான்போரிட முடியுமா?

“மகா பொல்லாத ஊர், சாமி இது”

“ஏன்? என்ன விசேஷம்?”

விசேஷமென்ன இருக்கு? வீண் வம்பளப்புதான், வாய்க்கு பூட்டா சாவியா?

என்ன சொல்கிறீர்களென்று எனக்கொன்றும் விளங்கவில்லையே?

என்சாமி அந்தவயற்றெறிச்சலைக் கேட்கிறீர்கள், நல்லது கெட்டது தெரிந்து கொள்ளத் தெரியாத நாய்கள் ஏதேதோ வம்புந்தும்பும் பேசுகின்றனவாம்.

யார் பேசறா? எதைக்குறித்துப் பேசுகிறா, விளங்கச் சொல்லுங்கள் கேட்போம்.

நான், இங்கே, ஏதோ சத்விஷயம் பேசிவிட்டுப் போக வருகிறேன் பாருங்கள், அதைப்பற்றி ஊரார் தாறுமாறாகப் பேசுகிறார்களாம். எனக்கொன்றும் தலைபோய்விடாது. நேற்றுத்தான் கேள்விப்பட்டேன். மனசு துடித்துவிட்டது. நம்மகாந்தா இருக்கே, அதுக்கும் எனக்கும் ஏதோ நடப்பதாகப் பேசுதாம் நாய்கள்.........

சிவ! சிவ! தங்கள் வாயாலே அதைச்சொல்ல வேண்டாம் மகாபாபம்! தோஷம்! அத்தகைய பேச்சு சொன்னவா நிச்சயம் அழிந்து போயிடுவா.

இல்லைசாமி! இதுகளுக்குஎவ்வளவு நெஞ்சழுத்தம் பாருங்கள். என்னடா ஒரு குடும்பத்தின் பேரை இப்படிக்கெடுக்கிறோமே என்று கொஞ்சமாவது ஈவு இரக்கம், நீதிநாணயம் இருக்கிறதா. கண்ணாலே கண்டால்கூட இந்தமாதிரி விஷயங்களை, விவேகிகள் வெளியேசொல்ல மாட்டார்கள், இங்கே பார்த்தா, ஒண்ணுமில்லை, நான் ஒரு பாபத்தையும் அறிந்தவனல்ல, ஏதோ பொழுது போக்காகவருகிறேன், பேசுகிறேன், போகிறேன். இதற்கு இப்படி வம்பளப்பு நடக்கிறது இந்த ஊரிலே. கேட்டது முதல் என்மனசு சரிப்படவேயில்லை. வரக்கூடாது என்று நினைச்சேன் முதலிலே. வாராமல்போனா, ஓஹோ, விஷயம் வெளியிலே தெரிந்துவிட்டதென்று முதலியார் இப்போ போகவில்லை என்றும் பேசுமே இந்தஜனங்கள் என்று யோசித்து, பிறகு வந்தேன். நான் போய்வருகிறேன் சாமி. பசங்கள் சௌக்கியந்தானே?

மிராசுதாரருக்கும் அப்பாவுக்கும் ஒருநாள் இதுபோல் பேச்சுநடந்தது. ஊரார்மீது பழிபோட்டு, மெதுவாக மிராசுதார் தமது கருத்தைத் தெரிவித்த தந்திரப்பேச்சு இது. ஊரார் வம்பளக்கவுமில்லை, கதை கட்டவுமில்லை, மிராசுதாரர் வேண்டுமென்றே இப்படி ஒரு புகார்செய்து வைப்போம், என்று செய்தார். நன்றாகத் தெரிந்தது, ஆனால் நாங்கள் என்ன செய்யமுடியும்? ஊரார் வம்பளக்கிறதாகச் சொல்கிறீர்

([illegible]ம் பக்கம் பார்க்க)